# தாய் மொழித் திறன்வளர் சங்கம்

தாய்மொழித் திறன் வளர்சங்கத்தின் சார்பாக இளங்கலை செயல்முறைத் தமிழ் முதலாமாண்டு பயிலும் மாணவிகளுக்கு தமிழில் ஒற்றுப்பிழை இல்லாமல் எழுதுவது குறித்து வகுப்பு நடத்தப்பட்டது. வாக்கியப்பிழை இல்லாமல் எழுதுதல், பிழை ஏற்படுவதற்கான காரணம் அதனை தவிர்க்க மேற்கொள்ளும் பயிற்சிகளும் கொடுக்கப்பட்டது.

மாணவிகளிடையே ஏற்படும் ஒருமை, பன்மயக்கத்தைப் போக்கவும், உயர்திணை, அ∴றிணை மயக்கம் போக்கவும், வகுப்பறைப் பயிற்சியும், வீட்டுப்பாடமும் கொடுக்கப் பெற்றது. இளங்கலை செயல்முறைத்தமிழ் இரண்டாமாண்டு மாணவிகளுக்கு விடுப்பு விண்ணப்பம், அலுவலகங்களுக்கு கடிதம் எழுதும் முறை, தற்காலிக சான்று பெறுவதற்கான விண்ணப்பம், வருகைச் சான்று பெறுவதற்கான விண்ணப்பம், கல்லூரியில் படிப்புச் சான்று பெறுவதற்கான விண்ணப்பம், உதவித்தொகை, சாதிச்சான்று, மருத்துவச் சான்றுகளை அலுவலகங்களில் பெறுவதற்கும், அனுப்புவதற்குமான முறைகள் கற்றுத்தரப்பெற்றது. அதன் அவசியம் குறித்தும் விளக்கப்பட்டது.

செயல்முறைத் தமிழ் மூன்றாமாண்டு பயிலும் மாணவிகளுக்கு பேச்சாற்றல், மற்றும் படைப்பாற்றலை வளர்க்கும் வகையில் பயிற்சிகள் மேற்கொள்ளப்பட்டது. அதன் அடிப்படையில் தமிழ் சொற்களை உச்சரிக்கும் திறனை வளர்க்கும் நிலையில் பயிற்சிகள் கொடுக்கப்பட்டது. தமிழில் சிறப்பெழுத்தகளை அறிய செய்து சொற்களில் பொருள் உணரும் வகையும், கலந்துரையாடும் தன்மையும் வளர்க்கப்பட்டது. மேலும் கவிதை, நாடகம், சிறுகதை முதலான படைப்பாற்றலை வளர்க்கவும், எழுத்துப் பயிற்சியும், பேச்சு, நடப்பு முதலான திறனை வளர்க்கவும் பயிற்சிகள் மேற்கொள்ளப்பட்டது.

இவற்றோடு மாணவிகளுக்குப் பேச்சுப் போட்டி, கவிதைப் போட்டி, கட்டுரைப் போட்டிகள் நடத்தப்பட்டு பரிசுகளும் வழங்கப்பட்டன இச்சங்கத்தின் சார்பாக உலகத் தாய்மொழித் திருநாள் விழா 21.02.2020 அன்று கொண்டாடப்பட்டது.

தாய் மொழி திறன்வளர் சங்கம் சார்பாக மூன்றாமாண்டு இளங்கலை, இளம் அறிவியல், முதுகலை, முதுஅறிவியல் மாணவிகளுக்கு பேச்சுப் போட்டி, கவிதைப் போட்டி, கட்டுரைப் போட்டி ஆகியன நடத்தப்பட்டன. பேச்சுப் போட்டி இலக்கியம் காட்டும் இலக்கு என்ற தலைப்பிலும், கவிதைப் போட்டி வளர் தமிழ் என்ற தலைப்பிலும், கட்டுரைப் போட்டி உலக அளவில் தமிழ் என்ற தலைப்பிலும் நடந்தது. பேச்சுப் போட்டியின் நடுவர்களாக முனைவர் V. வனிதா, விலங்கியல் துறைத்தலைவர் அவர்களும், முனைவர் V. குமார், பொருளியல் துறைப் பேராசிரியர் ஆகியோரும், கட்டுரைப் போட்டிக்கு நடுவராக பாரதி கணிதத்துறை கௌரவ விரிவுரையாளரும், கவிதைப் போட்டிக்கு நடுவராக முனைவர் S. விமலா, தமிழ்த்துறை கௌரவ விரிவுரையாளர் ஆகியோர் நடுவர்களாக செயல்பட்டனர்.